பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 07 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இகிலாந்துடனான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆறு நாள் அரசு முறைப் பயணமாக லாவோஸ் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

3. பட்ஜெட்டில் மகளிர் மேம்பாட்டுக்காக மூன்று லட்சத்து மூவாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

4. குஜராத்தில் பெய்து வரும் அதி கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ், இலங்கை அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

இங்கிலாந்துடனான இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு டேவிட் லாமி நேற்று புதுதில்லியில் பிரதமரை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இங்கிலாந்து பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய இந்தியா விரும்புவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரையும், இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் நேற்று சந்தித்துப் பேசினார்.

உலகளாவிய பிரச்சினைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது அவசியம் என்று திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய கூட்டறவுக் கொள்கை விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 48 உறுப்பினர்களைக் கொண்ட இதற்கான குழு வரைவுக் கொள்கையை இறுதி செய்து வருவதாகக் குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பை உருவாக்கும் இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு அமித்ஷா தெரிவித்தார்.

[]<<<>>>[]

இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுடன் நேற்று காணொலி மூலம் அவர் கலந்துரையாடினார்.

நடப்பு நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இளைஞர்களை மையமாகக் கொண்டது என்று அவர் கூறினார்.

நான்கு கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

திறன் மேம்பாட்டிற்காக இரண்டு லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்களிடையே சமூகப் பொறுப்புணர்வை வளர்ப்பதில் நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

மை பாரத் இணையதளம் தொடர்பான விழிப்புணர்வை நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் இளைஞர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் இதுவரை 65 மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் 20 பூங்காக்களை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மின்னணு துறையில் முதலீட்டை ஈர்க்கும் வகையில், பல்வேறு வசதிகளுடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பை ஏற்படுத்தும் நோக்கில், மின்னணு உற்பத்தி தொகுப்பு திட்டத்தை மத்திய அரசு தயாரித்துள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ், 15 மாநிலங்களில் 19 பசுமை மின்னணு உற்பத்தி மையங்களை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக திரு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் இதுவரை 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு பந்தி சஞ்சய் குமார் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தில் இதனை தெரிவித்த அவர், இந்த காவல் நிலையங்கள் இந்த இணைப்பை பயன்படுத்தி வருவதாகக் கூறினார்.

குற்றவாளிகள் தொடர்பான தரவுகளை சேகரித்தல், அவற்றை புதுப்பித்தல், பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றை சிசிடிஎன்எஸ் எளிதாக்கி இருப்பதாக திரு பந்தி சஞ்சய் குமார் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் எல்லைப் பகுதிகளில் உள்ள 17 ஆயிரத்து 611 கிராமங்களில் 16 ஆயிரத்து 818 கிராமங்கள் கைபேசி சேவை வசதியைப் பெற்றுள்ளதாக மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், 16 ஆயிரத்து 515 கிராமங்களில் நான்கு-ஜி மொபைல் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

[]<<<>>>[]

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் அரசு முறைப் பயணமாக இன்று லாவோஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

லாவோசின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான திரு. சலூம்க்சே கொம்மாசித்தின் அழைப்பின் பேரில் திரு ஜெய்சங்கர் அங்கு பயணம் மேற்கொள்கிறார்.

ஆசியான் - இந்தியா கூட்டம், கிழக்கு ஆசிய உச்சிமாநாடு மற்றும் ஆசியான் மண்டலக் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டங்களில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த பயணத்தின்போது பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை திரு ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்புப் பேச்சுகள் நடத்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அவர், வரும் 28-ம் தேதி ஜப்பான் செல்கிறார்.,

வரும் 29-ம் தேதி டோக்யோவில் நடைபெறும் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்களுடன் இணைந்து திரு ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

மண்டல மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

நடப்பு நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் மகளிர் நலனுக்காக மூன்று லட்சத்து மூவாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது கடந்த நிதி ஆண்டைக்காட்டிலும் 37 புள்ளி மூன்று சதவீதம் அதிகம் என்றார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்ற நிலையை நோக்கி நாடு முன்னேறி வருகிறது என்றும் திருமதி அன்னபூர்னா தேவி தெரிவித்தார்.

[]<<<>>>[]

பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தியில் நாடு சுயசார்பை எட்டும் நோக்குடன் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள டி ஆர் டி ஓ அலுவலகத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட அவர், தற்போது செயல்பாட்டில் உள்ள முக்கிய ஆராய்ச்சித் திட்டங்கள், அதிநவீன தொழில்நுட்பங்கள் போன்றவை குறித்து ஆலோசனை நடத்.தினார்.

செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், இணைய பாதுகாப்பு ஆகியவற்றில் தனியார் துறை ஒத்துழைப்பு குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

பாதுகாப்பு தொழில்நுட்ப மேம்பாட்டில் கல்வியாளர்கள் மற்றும் தொழில்துறையினரின் பங்களிப்பை ஊக்குவிக்க இந்த அமைப்பு மேற்கொள்ளும் முன்முயற்சிகளை திரு சஞ்சய் சேத் பாராட்டினார்.

[]<<<>>>[]

குஜராத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக் அங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அம்மாநிலத்தின் ஆனந்த், சூரத், பரூச் மற்றும் நர்மதா மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனந்த் மாவட்டத்தில் உள்ள போர்சத்தில் நேற்று அதிகபட்சமாக 35 சென்டி மீட்டர் மழை பதிவானது.

நர்மதா, பருச், சூரத் மற்றும் சோட்டா உதய்பூர் மாவட்டங்களில் பல இடங்களில் 10 சென்டி மீட்டருக்கும் கூடுதலாக மழை பெய்துள்ளது.

இதனால் பல இடங்களில் சாலைகளில் நீர் தேங்கியது.

மாநிலத்தின் பத்து ஆறுகளில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதுடன் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது.

நேற்று ஒரே நாளில் மாநிலத்தில் மழை காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 14 குழுக்களும், மாநில பேரிடர் மீட்புப் படையின் 20 குழுக்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே குஜராத், கோவா மற்றும் மத்திய மகாராஷ்டிரா-வின் பல்வேறு பகுதிகளில் இன்று அதி கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த சில நாட்களுக்கு இந்த பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழை தொடரும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டின் மத்திய பகுதிகளிலும் இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அது தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழக வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூருக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளது.

முதல்கட்டமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்த குழுவினர், மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் வேளாண் வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

பருவநிலை மாற்றம், புதிய வகை பயிர் வகைகள் அறிமுகம், மண்வளத்தை பாதுகாப்பது, பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பயிர்களை காப்பது உள்ளிட்டவை தொடர்பாக இக்குழுவினர் ஆலோசனை நடத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.,

**[]<<<>>>[]**

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வழங்கும் ஒலிம்பிக் ஆர்டர் என்ற உயரிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள துப்பாக்கி சுடும் வீரர் அபினவ் பிந்த்ராவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இது ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்பட வைப்பதாகக் கூறியுள்ளார்.

வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு அவர் வழிகாட்டியாக இருப்பதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறையில் அபிநவ் பிந்த்ரா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருப்பதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி-டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டங்களில் பங்களாதேஷ், இலங்கை அணிகள் வெற்றிபெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் தாய்லாந்தை வீழ்த்தியது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 114 ரன் வித்தியாசத்தில் மலேசிய அணியை வென்று அரை இறுதிக்கு முன்னேறியது.

நாளை நடைபெறும் முதலாவது அரை இறுதிப் போட்டியில் இந்தியா – பங்களாதேஷையும், இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை – பாகிஸ்தானையும் எதிர்கொள்கின்றன.

***End of News***